https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

31st MARCH 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 73



## மைத்திரி சிஐடியிடம் கூறிய ரகசியம்

# ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது யார்?

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது யார் என்ற தகவலை வெளிநாட்டு தூதரகம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட அடையாளம் தெரியாத நபரே தன்னிடம் கூறினார் என்று மைத்திரிபால சிறிசேன சிஐடியிடம் கூறியுள்ளார் என்று அறிய முடிகிறது.

02

# மைத்திரியிடம் தகவல் சொன்னவரைத் தேடும் சிஐடி

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது யாரென்ற தகவலை மைத்திரியிடம் கூறிய அந்த மர்ம நபரை சிஐடியினர் இப்போது தேடத் தொடங்கியுள்ளனர்.

வெளிநாட்டு தூதரகம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே இந்தத் தகவலை அவர் கூறினார் என்று மைத்திரி சிஐடியினரிடம் கூறியிருந்தார்.

சிஐடியினர் இப்போது அந்த நிகழ்வு இடம்பெற்ற இடத்தின் உஉவஎ வீடியோக்களை சோதித்துள்ளனர்.



# பாதாள குழுக்களுடன் தொடர்புடைய பொலிஸாரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை

பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பு வைத்துள்ள–அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கி வருகின்ற பொலிஸாரை கைது செய்வதற்கு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

02

# 2239 தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

கிறிஸ்தவ மக்கள் இன்று உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளை மேற்கொள்வதால் 2239 கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

2978 தேவாலயங்களுள் 2239 தேவாலயங்களில் மட்டுமே சமய வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இவற்றின் பாதுகாப்புக்கென பொலிஸ் அதிகாரிகள் 6900 பேரும்,470 விசேட அதிரடி படையினரும்,29000 இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், புலனாய்வு அதிகாரிகளும் கண்காணிப்பு பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.





புதுசுடர்
www.puthusudar.lk
2024 MARCH 31 - SUNDAY

# ரமழான் மாதப் பரிசு

இந்த நாட்டு அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்துபோயுள்ளபோதிலும் நீதித் துறைமீது நம்பிக்கை இழக்கவில்லை.அதற்கு சிறந்த உதாரணம்தான் பொது பல சேனாவின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரருக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

இஸ்லாத்தை அவனமாப்படுத்தியதற்காக அவருக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது முஸ்லிம்களின் மனதைக் குளிரச் செய்துள்ளது.ரமழான் மாத பரிசாக அமைந்துள்ளது.

போர் முடிந்ததன் பின்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் தலைதூக்கியது.2013 அளவில் ஹலால் சான்றிதழுக்கு எதிரான போராட்டத்தை பொது பல சேனா ஆரம்பித்ததன் மூலம் அந்த அமைப்பு பிரபல்யமானதோடு முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதமும் தலைதூக்கியது.

அந்த ஹலால் எதிர்ப்பு அவ்வளவு தூரம் அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்காதபோதிலும்,பேரினவாதம் அதனூடாக சிங்கள் மக்களுக்குள் நன்றாகவே ஊடுருவியது.

அதனைத் தொடர்ந்து முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயாவுக்கு எதிராகவும் புர்காவுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்தனர்.

முஸ்லிம்களின் வர்த்தகத்தை-வர்த்தக நிலையங்களை புறக்கணிக்குமாறு பிரசாரம் செய்தனர்.அதனைத் தொடர்ந்து அழுத்கம ,தர்ஹா நகர் போன்ற இடங்களில் கலவரங்களை ஏற்படுத்தி முஸ்லிம்களின் சொத்துக்களை-வீடுகளை-வர்த்தக நிலையங்களை முற்றாக அழித்தனர்.

அன்றைய தினம் பிற்பகல் அழுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக கூட்டம் ஒன்றை பொதுபல சேனா நடத்தியது.அதில் உரையாற்றிய ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கு எதிராகப் பேசி அங்கு நின்ற சிங்கள இளைஞர்களின் உணர்வைத் தூண்டினார்.

அதனைத் தொடர்ந்துதான் முஸ்லிம்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதலை பொது பல சேனாதான் முன் நின்று நடத்தியது என்பதை எல்லோரும் அறிவர்.

அத்தோடு அவர்களின் வெறி அடங்கவில்லை.அவர்களின் பிரசாரங்களை நாடு பூராகவும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இத்தனைக்கும் பின்புலத்தில் ராஜபக்ஸ சகோதரர்களின் அரசியல் இலாபம்தான் இருந்தது.கோத்தாவை ஜனாதிபதியாக்குவதற்கான தூர நோக்கு கொண்ட திட்டம் அதிலிருந்தது.

அதுபோக, அன்றை மஹிந்தவின் அரசை தூக்கி நிறுத்துவதே பொது பல சேனாவின் நோக்கமாக இருந்தது.

போர் வெற்றியைத் தொடர்ந்து 2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மஹிந்த அரசு பலமாக இருந்தது.

ஆனால்,அவர்களின் ஆட்சி ஊழல், மோசடி நிறைந்ததாக இருந்ததால் சிங்கள மக்கள் அந்த அரசுக்கு எதிராக மாறத் தொடங்கினர்.அவர்கள் மாறுவதைத் தடுப்பதற்காகவே பொது பல சேனா கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

இருந்தும்,2015 தேர்தலில் அந்த இனவாத பிரசாரம் எடுபடவில்லை.மஹிந்த தோல்வியடைந்தார். இருந்தாலும், அவர்கள் பொது பல சேனா ஊடான முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத பிரசாரத்தைக் கைவிடவில்லை.

2019இல் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதும் பொது பல சேனா வீறுகொண்டு எழுந்தது.முஸ்லிம்களுக்கு எதிராகக் கடுமையான பிரசாரங்களை மேற்கொண்டு அவர்களின் இலக்கான கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கும் திட்டத்தில் வெற்றிகொண்டனர்.

ஆனால்,அவர்களின் சதி இரண்டு வருடங்களில் முடிவுக்கு வந்தது. கோத்தாவை ஜனாதிபதியாக்கிய மக்களே அவரை விரட்டியடித்தனர். கேவலப்படுத்தினர்.

அந்தக் காலப்பகுதியில் பொது பல சேனா அவர்களால் இயலுமானவரை இஸ்லாத்தைக் கேவலப்படுத்தினர்.இறைவனை விமர்சித்தனர்.

ஆனால், இவர்களின் இனவாதம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. தேவைப்பட்டால் ஞானசார மீண்டும் பயன்படுத்தப்படுவார்.

மதவாதத்தை-இனவாதத்தைத் தூண்டுபவர்கள் இவ்வாறு தண்டிக்கப்படும்போதுதான் நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும்.இனவாதத்தை முற்றாக ஒழிக்க முடியும்.

## மைத்திரி..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**நல்லாட்சி அரசு சீனாவுடன் நெருங்கி செயற்பட்டது.அதன் காரணமாக,கோபமடைந்த தரப்பே இந்தத் தாக்குதலை நடத்தியது என்று அந்த நபர் மைத்திரியிடம் சொன்னதாக மைத்திரி சிஐடியிடம் மேலும் கூறியுள்ளார்.**

**இந்த வாக்குமூலத்தை சிஐடியினர் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கவுள்ளனர்.அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பின்னர் சட்டமா அதிபரின் ஊடாக அது நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும்.**

## பாதாள...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறான பொலிஸார்பற்றி தகவல் திரட்டுவதற்காக பொலிஸ்மா அதிபரால் விசேட புலனாய்வு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இது உள்ளமை குறிப்பிடத்தக்கது.










மக்களுக்குச் சேவைகளை செய்து அதன்மூலம் மக்களிடம் வாக்கு கேட்கும் பழக்கம் எமது நாட்டு அரசியல்வாதிகளிடம் கிடையாது

இனவாதத்தைக் கிளப்பி அல்லது ஏதாவது பரப்பான வேலைகளை செய்து அல்லது பரப்பாக பேசி வாக்கு கேட்பதுதான் வழக்கம்.

மக்களும் அப்படியானவர்களுக்குத்தான் வாக்குப் போட்டுப் பழகியுள்ளனர்.மக்களின் அந்த பலவீனத்தை வைத்துத்தான் இந்த அரசியல்வாதிகளும் அரசியல் செய்கின்றனர்.

அப்படியான ஒரு நகர்வைத்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மேற்கொண்டுள்ளார்.அவர் அதற்காக இப்போது கையில் எடுத்திருப்பது ஈஸ்டர் தாக்குதலை.

அவர் ஊடகங்களுக்கு வெளிப்படையாகவே கூறியுள்ளார்.""ஈஸ்டர் தாக்குதல் நடத்தியவர்கள் யாரென்று எனக்கு நன்றாகவே தெரியும்.அதை நான் நீதிபதிகளிடம் சொல்வேன்.அவர்கள் ரகசியம் காக்க வேண்டும் "" என்று தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றது அவரது ஆட்சியில்தான்-அவர் ஜனாதிபதியாக இருக்கும்போதுதான்.தாக்குதல் நடத்தியது யாரென்று தெரிந்திருந்தால் ஏன் அப்போதே அவர் அந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை?

அவரிடம் முழுமையான அதிகாரம் இருந்தது. அவர் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக இருந்தார். அவர் உடனடியாக குற்றவாளிகளைத் தண்டித்திருந்தால் இந்த நாடு மட்டுமல்ல முழு உலகமும் மைத்திரியைப் போற்றியிருக்கும்.பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நீதி கிடைத்திருக்கும்.

அதுமட்டுமல்ல அவர் அவரது ஆட்சியையும் காப்பாற்றி இருப்பார். அவரது அரசு கவிழ்ந்தது இந்தத் தாக்குதலின் காரணமாகத்தானே.இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோபம் காரணமாகவும் மைத்திரியின் ஆட்சியில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற அச்சம் காரணமாகவுமே மக்கள் அந்த ஆட்சியைக் கவிழ்த்தனர்.

தடுக்கத்தான் முடியவவில்லை.ஆகக் குறைந்தது குற்றவாளிகளையாவது தண்டித்திருந்தால் மக்கள் அவரை நம்பி இருப்பார்கள்.பாதிக்கப்பட்ட மக்கள் அவரை மன்னித்திருப்பார்கள்.

ஆனால்,முதுகெலும்பற்ற ஜனாதிபதியாக இருந்துவிட்டு-உண்மையெல்லாம் அறிந்து வைத்திருந்தும் இப்போது வந்து அதுபற்றிக் கூறுவதில் என்ன பயன். அதனால் அவருக்குத்தான் அவமானம். அவரது இயலாமையை-விவேகமற்ற தன்மையைத்தான் இது காட்டுகிறது.

இந்த ஈஸ்டர் தாக்குதலால் அப்பாவி முஸ்லிம்கள் எப்படிப்பட்ட துன்பங்களை அனுபவித்தார்கள் -எப்படிப்பட்ட இனவாதத் தாக்குதலுக்கு உள்ளானார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

குருநாகல்,மினுவாங்கொட போன்ற பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகள் கலவரங்களை ஏற்படுத்தினார்கள்.கடைகள் -வீடுகளை எரித்தார்கள்.மினுவாங்கொடவில் ஒரு முஸ்லிம் சகோதரர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

குருநாகலில் டொக்டர் ஷாபி ஷிஹாப்தீனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத செயற்பாடு முழு நாட்டையும் உலுக்கியது.

முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகள்போலும் அவர்கள் நாட்டை அழிக்க வந்தவர்கள்போலும் பார்க்கப்பட்டனர்ஊடகங்களால் காட்டப்பட்டனர்.

ஹிஸ்புல்லாஹ்வின் பல்கலைக்கழகம் இஸ்லாமிய பயங்கரவாதத்தை வளர்க்கும் இடமாகக் காட்டப்பட்டு அந்த இடம் அரசால் கைப்பற்றப்பட்டது.

ஆளுநர்கள் ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலி ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று கூறி அத்துரலிய ரத்தின தேரர் தலதா மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதமிருந்தார்.

அதன் விபரீதத்தை உணர்ந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ,ஆளுநர்கள் மாத்திரமல்ல அரசில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் விலக வேண்டும் என்றொரு தீர்மானத்தை எடுத்தார்.

அந்தத் தீர்மானத்தை மதித்து அனைவரும் பதவி விலகினர்.அதனால் ஏற்படவிருந்த விபரீதம்-ஆபத்து தடுக்காப்பட்டது.

அதிலும் முக்கியமான விடயம் என்னவென்றால் அத்துரலிய மைத்திரியின் நெருக்கமானவராக இருந்தார்.அவர் உண்ணாவிரம் இருப்பதை மைத்திரியால் தடுக்க முடியவில்லை.

பல்வேறு இடங்களில் முஸ்லிம்கள் பெரும் அவஸ்தையை எதிர்கொண்டனர்.இனவாத ஒதுக்களை எதிர்கொண்டனர்.

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரியான ஸஹ்ரான் குழுவுடன் சம்பந்தப்படாதவர்களும் கைது செய்யப்பட்டனர்.அவரது பிரசாரத்தை செவிமடுத்தவர்கள்,அவரது பள்ளிவாசலுக்குச் சென்றவர்கள் என எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

மைத்திரி நினைத்திருந்தால் நாட்டில் இத்தனை அநியாயங்களையும் தடுத்திருக்கலாம். அவர்




# மைத்திரிக்கு எதிராக மைத்திரி நடத்தும் விஷப் பரீட்சை



முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவொரு இனவாத செயற்பாட்டையும் தடுக்கவில்லை. அப்போது முதுகெலும்பற்ற

**ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளை அப்போதே அவர் தண்டித்திருந்தால் அவரது ஆட்சியையும் காப்பாற்றி இருப்பார். அவரது அரசு கவிழ்ந்தது இந்தத் தாக்குதலின் காரண மாகத்தானே. இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோபம் காரணமாகவும் மைத்திரியின் ஆட்சியில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற அச்சம் காரணமாகவுமே மக்கள் அந்த ஆட்சியைக் கவிழ்த்தனர்.**

தலைவராக இருந்துவிட்டு இப்போது வந்து பில்டப் காட்டுவதில் என்ன பயன் இருக்கிறது ?

இது தேர்தலை அடிப்படையாக வைத்து அவர் நகர்த்தும் காயாகும்.மஹிந்த தரப்பை குறிவைத்து நடத்தும் அரசியல் என்பதுமட்டும் தெளிவாகப் புரிகிறது.

இது மைத்திரிக்கு எதிராக மைத்திரி நடத்தும் விஷப் பரீட்சை என்பது மாத்திரம் தெளிவாகப் புரிகிறது.

# புனித ஹஜ்

# HAJJ 2024

## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்




**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**

**0775046995 I 0777667152**

**அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391**

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com




# HAJJ PILGRIMAGE 2024

# புனித ஹஜ்



47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service Over 3 Decades

IATA ACCREDITED AGENT

# ஹஜ்

# HAJJ 2024

## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்




**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஜப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்



For further details, contact:

**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**


## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk

# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:

அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - **0777141151**
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - **0777151156**


# பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**

#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

# அவர் மனதில் இவர்: இவர் மனதில் பெரியவர்



இந்த வருடம் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கான ஏற்பாட்டோடுதான் பசில் ராஜபக்ச அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்துள்ளார்.

அவரது நிலைப்பாடு முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான். அப்படியில்லாது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் மொட்டு கட்சியின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்த வேண்டும் என்பதுதான் பசிலின் நிலைப்பாடு.

ஆனால், மஹிந்தவின் நிலைப்பாடோ வேறு. பசிலை நிறுத்த வேண்டும் என்பதுதான்.

பசிலுக்கு அதில் விருப்பமில்லை.காரணம் எந்தத் தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தாலும் இலங்கையின் சட்டப்படி வெளிநாட்டு பிரஜா உரிமையைக் கைவிட வேண்டும்.

தோற்கப் போகிற தேர்தலுக்காக அவரது அமெரிக்க பிரஜா உரிமையை இழக்க அவர் தயாரில்லை.



# கோபத்தால் சிவந்து போன பசிலின் முகம்?

பசில் ராஜபக்ச இலங்கைக்கு வந்த உடனேயே அவர் அவசர அவசரமாக ஜனாதியுடன் சந்திப்பை ஏற்படுத்தி இருந்தார்.

அவருடன் மஹிந்தவும் சென்றிருந்தார்.

இப்படித்தான் செய்திகள் வெளியாகியிருந்தன.ஆனால்,அதில் கலந்துகொண்ட இன்னொருவரைப்பற்றி எந்தச் செய்தியும் வெளியாகவில்லை.

அவர் யாரென்றால் மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித்த ராஜபக்ச.

பேச்சு இடம்பெற்றிக்கொண்டிருக்கும்போது யோஷித்த வந்து பேச்சில் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி தரப்புதான் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது. எதற்காக அந்த அழைப்பு என்று பசிலுக்குத் தெரியவில்லை.

யோஷிதவின் இந்த நுழைவால் கோபத்தால் சிவந்து போனது பசிலின் முகம்.

துப்பறிவாளன்



# யோசிதவுக்கு வந்த தொலைபேசி அழைப்பு

கூட்டம் முடிந்து எல்லோரும் கலைந்த பின் சிறிது நேரத்தில் ஒருவரிடமிருந்து யோசிதவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

அழைப்பை எடுத்த நபர் அந்தக் கூட்டத்தில் பசில் ரணிலுடன் நடந்துகொண்ட விதத்தை விமர்சித்துப் பேசினார்.

பசில் நடந்துகொண்ட விதம் தொடர்பில் ஜனாதிபதி திருப்தியடையவில்லை என்று கூறினார்.

மேலும், பசிலைக் கட்டுப்படுத்துவதற்கு மஹிந்த நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் ஜனாதிபதி கவலையடைந்துள்ளார் என்றும் சொன்னார்.

அதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார் யோசித.



# அப்படியொரு நட்பாம்

யோசித்தவை இந்தக் கூட்டத்துக்கு அழைப்பதற்குக் கரணம் சாகல ரத்நாயகதான்.

அண்மைக் காலமாக யோசிதவுக்கும் சாகலவுக்குமிடையில் நெருக்கமான நற்பு நிலவுகிறது.

மஹிந்தவும் ஜனாதிபதியும் அடிக்கடி சங்கரில்லா ஹோட்டலில் சந்தித்துப் பேசுவதுண்டு.அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சாகலவும் யோசிதவும்தான்.

அந்த நெருக்கம் காரணமாகவே இந்த பசில்-ரணில் சந்திப்புக்கு சாகல யோசித்தவை அழைத்திருந்தார்.



# ஜனாபதிபதியுடன் இருப்பவர்களுக்கு வெட்டு

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே பசில் ராஜபக்சவின் நிலைப்பாடு.

அந்தத் தேர்தல் இடம்பெற்றால் முக்கியமான வேலை ஒன்றைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளார் பசில்.

அது ஜனாதிபதியுடன் ஒட்டி நின்று மொட்டு கட்சிக்கு எதிராக செயற்படும் மொட்டு கட்சியை சேர்ந்த எம்பிக்கள் மற்றும் அமைச்சர்களுக்கான ஆப்பு.

அவர்களுக்கு அந்தத் தேர்தலில் மொட்டு கட்சியில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்று பசில் தீர்மானமெடுத்துள்ளாராம்.

அவர்களின் மாவட்டங்களில் அவர்களுக்கு அடுத்த இடத்தில் உள்ளவர்களை மேலே கொண்டு வருவதுதான் பசிலின் திட்டமாம்.



# ஜனாதிபதிமீது எரிந்து வீழ்ந்த பசில்

பசிலும் ஜனாதிபதியும் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு கட்டத்தில் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்படத் தொடங்கியது.

பசில் ஜனாதிபதிமீது எரிந்து விழத் தொடங்கினார்.

ஜனாதிபதியை மொட்டு கட்சிதான் நியமித்தது.ஆனால் ,மொட்டு ஆட்களுக்கு ஜனாதிபதி சலுகை காட்டுவதில்லை என்று கூறியே பசில் ஜனாதிபதிமீது பாய்ந்தார்.

# அந்தப் பக்கம் ஒரு கால்: இந்த பக்கம் ஒரு கால்

கடந்த வாரம் ஆளுங்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றில் உரையாடிக்கொண்டிருந்தனர்.அரசியல் விவகாரம் பற்றி பேசினர். அப்போது இரண்டு எம்பிக்களிடையே முறுகல் ஏற்பட்டது.அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலையிட்டு அதைத் தீர்த்து வைத்தார்.




அதற்குக் காரணம் மொட்டு எம்பிக்கள் சிலர் கட்சிக்கு விசுவாசமாக இல்லாமல் இந்தப் பக்கம் ஒரு காலும் அந்தப் பக்கம் ஒரு காலும் வைத்துள்ளனர்.

தேர்தலில் தோற்றாலும் தேசிய பட்டியல் பெற்றுக்கொள்ளும் நோக்கில்தான் இவ்வாறு செய்கிறார்கள் என்று சஹன் பிரதீப் எம்பி கூறினார்.

அவர் அவ்வாறு கூறியமை பிரச்சினை இல்லை.அருகில் நின்ற திஸ்ஸ குட்டியாராச்சி எம்பியைப் பார்த்துப் பார்த்துக் கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த திஸ்ஸ தான் அப்படிப்பட்டவன் அல்ல என்று கூறி பிரதீப் மீது பாயத் தொடங்கினார்.

பிரச்சினையை நீண்ட தூரம் செல்லவிடாமல் பிரசன்ன ரணதுங்க அமைச்சர் தலையிட்டு தீர்த்து வைத்தார்.



சின்னத்தம்பி குருபரன்

## தொடர்-02

# மர்மங்கள் நிறைந்த விலையேற்றம்

பொருட்களுக்குத் திடீரென விலை குறைந்தால் வியாபாரிகளில் பெரும்பாலானோர் மூன்று, நான்கு நாட்களுக்கு விலையைக் குறைக்காமல் பழைய விலையில் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

ஆக மொத்தத்தில் வியாபாரிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.அவர்கள் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கு அரச, அதிகாரிகள் பலர் காரணமாக இருக்கின்றனர். இந்த மர்மங்கள் பித்தலாட்டம் காரணமாக அப்பாவி மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின றனர்.

உள்நாட்டு நாணயத்தின் (ரூபாவின்) பெறுமதி இறக்கம் காரணமாக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்துக் காணப்படுகின்றது.அதனால் இறக்குமதிப் பொருளின் விலை அதிகரிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

ஆனால் பெரும்பாலும் உள்நாட்டு மூலப்பொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பால்மா, சீனி, சீமெந்துபோன்ற பல பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைக்குச் சமாந்தரமாகவே விற்பனை செய்யப்படுகின்றன.

இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வாறு தரகுப் பணம் கைமாற்றப்படுகின்றது என்பது பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு மாத்திரமே தெரியும்.

இறக்குமதிகள் யாவும் பல மர்மமான முறையில் பல கோடிகள் தரகுப் பணமாகக் கைமாற்றப்பட்டுத்தான் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதில் அங்கீகரிக்கப்படாத தரம் குறைந்த பொருட்களும் நிறை குறைந்த மற்றும் காலாவதித் திகதியை அண்மித்துள்ள பொருட்களும் அடங்கும். இதனால் மக்கள் பாதிக்கப்படுவதோடு பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன.

அண்மைக்காலமாக உற்பத்தியாளர்கள் பொருட்களின் தரத்தையும் அதன் நிறையையும் குறைத்து விலையைக் குறைத்திருக்கின்றனர்.

இதனைக் கண்காணிப்பதற்கும் நுகர்வோருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, தர நிர்ணயப் பணியகம் இவை எல்லாம் இருக்க அப்பட்டமாக, வெட்டவெளியாக இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுகிறதென்றால் இதற்குப் பின்னால் பல மர்மங்களும் பித்தலாட்டங்களும் நிறைந்திருக்கிறதென்பதை உணர முடிகிறது.





மக்களின் பாதுகாப்புக்காக, அவர்களுக்கு நல்லது செய்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாய்மூடி மௌனிகளாக இருந்துகொண்டிருக்கின்றனர்.

இதில் பல உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும், மொத்த வியாபாரிகளும் தேர்தல் காலங்களில் தேர்தல் நிதியாகப் பல கோடி ரூபாக்களை வழங்குகின்றனர். அவர்கள் அங்கு கொடுத்து மக்களிடம் இருந்து எடுத்துக்கொள்கின்றார்கள்.

உற்பத்தியாளர்கள் குழியலறைகளில் பயன்படுத்தப்படும் சவற்காரங்களில் பெரும்பாலானவற்றை முன்பு 85, 90 கிராம் நிறையில் உற்பத்தி செய்தனர்.

தற்பொழுது அதனை நிறையை 70 கிராமாகக் குறைத்து விலை குறைத்து விற்பனை செய்வதை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

இங்கு உற்பத்தியாளர் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் மேலும் இலாபத்தினை உழைத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறுதான் பல மர்மங்களும் பித்தலாட்டங்களும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

கடந்த ஆறு மாதங்களில் ஓரிரு தடவைகளைத் தவிர சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை கணிசமானளவு குறைந்திருக்கிறது.

இலங்கை கூடிய விலையிலான விலை மனுக் கோரலின் அடிப்படையில் மசகு எண்ணெயினைப் பெறுவதனால் பெற்றோலியப் பொருட்களுக்கான விலையில் சில ரூபாக்களை மாத்திரம் குறைத்து மீண்டும் பல வீதங்களால் விலையை ஏற்றிவிடுகின்றனர்.

அதேபோல் இலங்கையின் எரிபொருள் நிரப்பு நிலையங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கும் இந்தியா ஐஓசீ, சீனாவின் சினொபெக் நிறுவனங்களிடம் இருந்து தரகுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு சிபெட்கோவின் விலையில் பெற்றோலியப் பொருட்களை விற்பதற்கு அனுமதியளிக்கின்றனர்.

கடந்த பல தினங்களாக டொலரின் பெறுமதி வீழ்ச்சி கண்டு வருகிறது. ஆனால் கூட்டப்பட்ட பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதிலுள்ள மர்மமும் பித்தலாட்டமும் சம்பந்தப்பட்ட நபர்களோடு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக அரசாங்கத்தின் அத்தியாவசியத் தேவைகளைத் தவிர வாகன இறக்குமதித் தடை செய்யப்பட்டிருக்கிறது.

அரசியல்வாதிகளின் அடிவருடிகள், வேண்டப்பட்டவர்களுக்கு மாத்திரம் சில நாடுகளில் இருந்து வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து இலங்கையில் தயாரித்து விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக இந்திய வுஏளு நிறுவனத்திடம் இருந்து மோட்டார் பைக் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து தனியுரிமையின் அடிப்படையில் உற்பத்தி செய்து கொள்ளை இலாபத்துடன் விற்பனை செய்கின்றனர்.

உதாரணமாக வுஏளு வேழுசுஞ 125 சுயஉந நுனவைழைெ மோட்டார் பைக்கின் பெறுமதி ரூபா 755,000, உற்பத்தி நிறுவனத்தின் களஞ்சியசாலையில் இருந்து ஏற்றி இறக்கல் செலவு ரூபா 10,000, வாகனப் பதிவுக் கட்டணம் ருபா 7,500, சேவைக் கட்டணம் ரூபா 7,500 என உடன்காசு 780.000 வுக்கு மட்டக்களப்பில் விற்பனை செய்யப்படுகிறது.

ஒருவர் மூன்று வருட லீசிங் கொடுப்பனவில் அம்மோட்டார் பைக்கை எடுப்பாரேயானால் காப்புறுதிக் கட்டனம், லீசிங் மாதாந்தக் கட்டணம், தாமதக் கட்டணம் அது இது என்று ரூபா 1,000,000 இலட்சத்தையும் தாண்டிவிடும்.

தனியுரிமை என்ற அடிப்படையில் ஆசை கட்டி மோசம் செய்து கொள்ளையிடுகின்றனர். அத்தோடு இரண்டு இலவச சேவைகள் என்ற பெயரில் அதற்குரிய ஒயில் வழங்காதுவிடுகின்றனர்.

இந்த மோட்டார் பைக்கில் இன்னும் பல பிரச்சினைகளும் இருக்கின்றன. தனியுரிமை என்பதனால் அதன் உதிரிப் பாகங்கள் பல மடங்கு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்தோடு ஒரு லீற்றர் பெற்றோலுக்கான இயங்கு தூரம் (ஆடைந யபந) மிகக் குறைவாகவே உள்ளது. எரிதகனம் அதிகம் இருப்பதனால் காபன் துணிக்கைகளின் வெளியேற்றமும் அதிகம் இருக்கும்.

அதனால் சுற்றாடல் பாதிப்புக்களும் ஏற்படலாம் என நம்பப்படுகிறது. இந்த வாகன உற்பத்தி, விற்பனை என்பவற்றிலும் பல மர்மங்கள் நிறைந்திருப்பதாகப் பலரும் பேசிக் கொள்கின்றனர்.

இவ்வாறு ஒரு சில பொருட்கள்பற்றித்தான் இப்பத்தியில் கூறுயிருக்கின்றேன். இதுபோலவே எல்லாப் பொருள் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றிலும் விலை, கட்டண ஏற்ற, இறக்கங்களிலும் பல ஊழல், மோசடிகளும் மர்மங்களும் பித்தலாட்டங்களும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இவை தொடர்பாக மக்கள்தான் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

-முற்றும் -










# சுகாதாரத் துறையை மேம்படுத்தி வரும் மக்கள் வங்கி

தனது “மகாஜன மெஹெவர“ நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பொரளை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் அத்தியாவசியமான புனரமைப்புப் பணிகளுக்கு மக்கள் வங்கி அனுசரணையளித்துள்ளதுடன், நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சௌகரியத்திற்கு அவசியமான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு ஸ்தாபனங்கள் சமூகத்திற்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கு அவற்றுக்கு உதவுவதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை இச்செயற்திட்டம் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கை எங்கிலுமுள்ள பெண்களுக்கு விரிவான பராமரிப்பை வழங்குவதில் பெயர்பெற்றுள்ள காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, இந்த உன்னதமான முயற்சியின் பயனைப் பெற்றுள்ளதுடன், அதன் வசதிகளுக்கு மிகவும் தேவைப்பட்ட புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் அடையாளமாக மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச அவர்கள் காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தந்தநாராயண அவர்களிடம் இதற்கான காசோலையை கையளித்து வைத்துள்ளார்.

இந்த நல்லெண்ணம் சமூக நலன்புரியில் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிக்காண்பிப்பது மட்டுமல்லாது, வர்த்தக உலகில் முன்மாதிரியாக செயற்படுவதில் அதன் வகிபாகத்தையும் புலப்படுத்துகின்றது.

# செலான் வங்கியின் BleedGood





இலங்கை முழுவதும் பெண்களுக்கு மாதவிடாய் தொடர்பான ஆரோக்கியம் மற்றும் அதன் ஆதரவுக்கான அணுகலை மறுவரையறை செய்வதற்கான ஒரு தைரியமிக்க நடவடிக்கையாக, Selyn நிறுவனமானது தனது முதன்மை #BleedGood முன்முயற்சியினை மார்ச் 14, 2024 அன்று பெருமையுடன் வெளியிட்டது.

BMICH இன் Mihilaka Madhura நடைபெற்ற ”இரத்தத்தால் பிணைக்கப்பட்டது” எனும் மகுடத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வானது, பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் சார்ந்த உரிமைகளை ஆதரிக்கும் அதே வேளையில் மாதவிடாய் தொடர்பான சிரமங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு முக்கிய தருணத்தினை இது குறிக்கின்றது.

#BleedGood என்பது மீண்டும் பயன்படுத்தக்கூடிய Pad கள், அறிவூட்டல் கருத்தரங்குகள் மற்றும் மாதவிடாய் தொடர்பான ஆரோக்கியத்தில் நல்மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட பல்வேறு ஆர்வலர்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளை உள்ளடக்கிய மனிதாபிமான ஆதரவினை வழங்கும் ஒரு முழுமையான அணுகுமுறையினை இது பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

”Selyn நிறுவனதின் நோக்கமானது வெறுமனே பெண்கள் தொடர்பான மனித நேயம் எனும் விடையத்தினையும் தாண்டி, எமது சமூகங்களில் இருக்கக்கூடிய பெண்களின் வாழ்வியலில் உறுதியான, நீடித்த மாற்றத்தினை ஏற்படுத்துவதோடு, அதனை ஆதரிப்பதற்கான ஒரு பரந்த பிரச்சார முன்முயற்சி அமைப்பினை உருவாக்கி ஊக்குவிப்பதுமாகும்.

# PEPSயின் கோடைகால விளம்பரம்




Pepsi® அதன்புதிய கோடைக்காலப் பிரச்சாரத்தை வெளியிட்டுள்ளது இலங்கையில் “புத்துணர்ச்சியூட்டும் பெப்சி, கம்பீரமான புதிய தோற்றம்“ என்பதை வலியுறுத்தி ஜாக்குலின் பெர்னாண்டஸ /டன் சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒரு விளம்பரத்தை மீள்உருவாக்கம் செய்துள்ளது.

“புத்துணர்ச்சியூட்டும் பெப்சி, கம்பீருமான புதிய தோற்றம்“ என்ற பிரச்சார நிலைப்பாட்டுடன் இந்த TVC ஆனது, பெப்சியின் புகழ்பெற்ற Cindy Crawford விளம்பரத்தால் ஈர்க்கப்பட்டு, பெப்சி பேக்கேஜிங்கின் கம்பீருமான மேக்ஓவரைக் காண்பிக்கும் ஒரு நவீன தோற்றத்தைக் கொண்டுள்ளது.

இந்தத் திரைப்படம் ஒரு ஒதுக்குப்புற விண்டேஜ் எரிவாயு நிலையத்தில் இரண்டு சிறுவர்கள் தங்கள் டேங்குகளை நிரப்புவதைக் காட்டி தொடங்குகிறது. ஒரு பைக்கில் ஒரு பெண் வேகமாக பெட்ரோல் நிலையத்திற்கு வருகிறார்.

அவர் தனது பைக்கை நிறுத்திவிட்டு ஹெல்மெட்டைக் கழற்றியபின் அது ஜாக்குலின் பெர்னாண்டஸ் என்பது வெளிப்படுத்துகிறது, ஸ்போர்ட்ஸ் கட்–ஆஃப் ஜீன் ஷார்ட்ஸ் மற்றும் வெள்ளை டேங்க் டாப் அணிந்திருக்கிறார்.

Pepsi® கேனில் இருந்து ஜாக்குலின் ஒரு சிப் அடிப்பதை படம் காட்டுகிறது. சிறுவர்கள் திகைத்து நிற்கிறார்கள், மேலும் அவர்கள் ஜாக்குலினின் தோற்றத்தால் கவரப்படுகிறார்களா அல்லது புதுப்பிக்கப்பட்ட பெப்சி மேக்ஓவரால் கவரப்படுகிறார்களா என்று இப்படம் உங்களை யூகிக்க வைக்கும் – இறுதியில் அவர்கள் Pepsi® கண்டு வியந்ததாக படம் முடியும்.



# ‘Sri Lankan Artists 2024’ கண்காட்சி

ஜோர்ஜ் கீற் அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்படும் ‘Sri Lankan Artists 2024’ கண்காட்சி, ஆறு ஆண்டுகளின் பின்னர் இம்முறை மீண்டும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கண்காட்சியின் மாபெரும் அங்குரார்ப்பண நிகழ்வு 2024 மார்ச் 22 ஆம் திகதி கொழும்பு ஜேடிஏ பெரேரா கெலரியில் முன்னெடுக்கப்பட்டு, மார்ச் 26 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெற்றது.

ஜோர்ஜ் கீற் அறக்கட்டளையின் ‘ளுசை டுயமெயெ யுசவளைவள 2024’ கண்காட்சி என்பது தேசத்தின் கலைச் சிறப்பை கொண்டாடுவது மாத்திரமன்றி, வளர்ந்து வரும் கலைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து கொண்டாடும் வகையிலும் அமைந்திருந்தது.

அரசாங்கத்துடன் கைகோர்ப்பது தொடர்பான எதிர்காலத் திட்டத்தைக் கொண்டுள்ள இந்த கண்காட்சி, வெளிநாடுகளில் கலைச் சந்தைகளை முன்னெடுத்து இலங்கையின் கலைஞர்களை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தியது.



# SLAF மற்றும் Agro World உடன் HNB PLC புரிந்துணர்வு ஒப்பந்தம்

HNB PLC, Smart Village திட்டத்தில் பங்குபெறும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளை வலுவூட்டும் நோக்கில் Sri Lanka Agripreneurs' Forum (SLAF) மற்றும் Agro World (Pvt) Ltd ஆகியவற்றுடன் தனது மூலோபாய பங்காளித்துவத்தை அண்மையில் அறிவித்தது.

SLAF மற்றும் Agro World பங்கேற்புடன் HNB தலைமை அலுவகத்தில் மூன்று தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒத்துழைப்பு இந்த விவசாயிகளுக்கு நிதி தேவைகள், சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் புதிய சந்தைகளுக்கான வாய்ப்புக்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறைந்த உற்பத்தித்திறன், பல்வகைப்படுத்தல் இல்லாமை, சந்தை இணைப்புகள் இல்லாமை, உள்ளீடுகள் கிடைக்காமை மற்றும் மிகவும் தேவையான கடன் வசதிகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலை எதிர்கொள்ளும் விவசாய நிறுவனங்களை இந்த முயற்சி ஆதரிக்கிறது.

"எங்களின் நோக்கம், நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு சிறந்த நிதியுதவி வழங்குவது, உற்பத்தியை மேம்படுத்த புதிய நுட்பங்களை கடைப்பிடிப்பது மற்றும் உள்ளூரிலும் உலகில் எந்த பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்." என HNB துணைப் பொது முகாமையாளர், SME ரூ Microfinance, ரஜீவ் திஸாநாயக்க தெரிவித்தார்.

# DFCC வங்கி அறிமுகப்படுத்தும் வீட்டுக் கடன்கள்




வாடிக்கையாளர்களின் தனித்துவமான மற்றும் பல்வகைப்பட்ட தேவைகளைப் புரிந்துகொண்டுள்ள DFCC வங்கி, தனது DFCC வீட்டுக் கடன்களுக்கு பல்வேறுபட்ட மீள்கொடுப்பனவுத் தெரிவுகளை வழங்கியுள்ளது.

வெறும் 3 தினங்களுக்குள் கடன் அங்கீகாரங்களுடன், உச்சபட்ச நெகிழ்வுத்தன்மை மற்றும் சௌகரியத்தை வழங்குகின்றது. சந்தையில் மிகவும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்கும் DFCC வீட்டுக் கடன்கள், பல்வேறு நெகிழ்வுத்தன்மையுடன் கட்டமைக்கப்பட்ட மீள்கொடுப்பனவுத் திட்டங்களையும் வழங்குகின்றது.

குடியிருப்பதற்காகவெற்றுக்காணியொன்றை அல்லது ஏற்கனவே நிர்மாணிக் கப்பட்டுள்ள அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடு அல்லது அடுக்குமனை யொன்றை வாங்க விரும்புகின்றவர்களுக்கு DFCC வீட்டுக் கடன்கள் மிகச் சிறந்த தெரிவாகும்.

ஏற்கனவே சொந்தமாகவுள்ள காணியில் வீடொன்றை நிர்மாணிக்க, காணியொன்றை வாங்க, வீடொன்றை நிர்மாணிக்க அல்லது கொள்வனவுத் தொகையை மீளச்செலுத்த விரும்புகின்றவர்களுக்கும் இது மிகவும் பொருத்தமானது.

DFCC வங்கி வழங்கும் நெகிழ்வுத் தன்மையானது ஏனைய வங்கிகளில் நீங்கள் ஏற்கனவே கொண்டுள்ள கடன்களை இன்னும் கூடுதலான சாதகமான மற்றும் சீரான ஏற்பாட்டுடன் DFCC வீட்டுக் கடன்களாக மாற்றிக்கொள்ளவும் இடமளிக்கின்றது.



# Mahindra உழவு இயந்திரங்களுக்கு ஒரு வருட இலவச பராமரிப்பு

DIMO Agribusinesses தனது நீண்ட கால பங்காளியான Mahindra Tractors உடன் இணைந்து,விவசாயிகளுக்கு அதிக நன்மைகளை வழங்கும் வகையில் Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு இலவச பராமரிப்பு சேவைகள் உள்ளிட்ட மேலும் பல வசதிகளை வழங்க, DIMO Agribusinesses ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

DIMO நிறுவத்தின் விவசாயப் பிரிவான DIMO Agribusinesses, நாட்டின் விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்ப உழவு இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், உள்ளூர் விவசாயத்தின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரத்தை கடந்த போகத்தில் இலங்கைக்கு அறிமுகம் செய்திருந்தது.

Mahindra Tractors இன் அதிக எரிபொருள் திறன் கொண்ட Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரமானது, கடந்த போகம் நிறைவடைவதற்கு முன்னரே சாதனை வேகத்தில் சந்தையில் வளர்ச்சி அடைந்தது.

இந்த விரைவான சந்தை வளர்ச்சியைத் தொடர்ந்து, Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரங்களை கொள்வனவு செய்யும் விவசாயிகளுக்கு, தொழிலாளர் கட்டணம் அற்ற 3 பராமரிப்பு சேவையுடன், Mahindra உழவு இயந்திரங்களுக்கு அதன் உற்பத்தி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட M Star அசல் எஞ்சின் ஒயிலை இந்த மூன்று பராமரிப்பு சேவைகளிலும் DIMO Agribusinesses இலவசமாக வழங்குகிறது.

அத்துடன் 6 பராமரிப்பு சேவைகளுக்கான துணைப் பாகங்களையும் இலவசமாக வழங்குகின்றது. அந்த வகையில், இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரங்களுக்கு ஒரு வருடத்திற்கான இலவச பராமரிப்பு சேவைகளை வழங்க DIMO ஏற்பாடு செய்துள்ளது.

# Marina Square, Sky High Sundowns முதலீட்டுக் கூட்டம்



Marina Square uptown Colombo, “Sky High Sundowns" என்ற பிரத்யேக முதலீட்டாளர் மன்றங்களின் தொடரை அறிவித்தது.

இது இன்றைய ஆற்றல்மிக்க ரியல் எஸ்டேட் சந்தையை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டதுடன் பங்கேற்பாளர்களுக்கு தற்போதைய ரியல் எஸ்டேட் முதலீட்டில் உள்ள முக்கிய காரணிகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது.

பிரமிக்க வைக்கும் சமுத்திரம், கொழும்புத் துறைமுகம் மற்றும் நகரின் வான் பரப்பு காட்சிகள் ஆகியவற்றின் பின்னணியில் இந்தத் தொடர்மாடி தொகுதி தொடங்கப்பட்டது.

பங்கேற்பாளர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிக்கவும் அபாயங்களைக் குறைக்கவும் விரும்பும் முதலீட்டாளர்கள் விலைமதிப்பற்ற சிறந்த ஒன்றை பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.

பிரத்தியேக நிகழ்வில் உரையாற்றிய Marina Square இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.கோசல விக்கிரமசிங்க அவர்கள் கூறுகையில் “குறிப்பாக முதலீட்டுச் சூழலின் மாறும் தன்மை காரணமாக, இந்தத் தொடரைத் தொடங்க இது ஒரு பொருத்தமான நேரம் என்று நாங்கள் உணர்ந்தோம்.

தகவலறிந்து வாங்குபவர் சிறந்த முடிவுகளை எடுப்பார் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம், மேலும் இந்த தொடர் முதலீட்டாளர்களுக்கு ரியல் எஸ்டேட் முதலீட்டின் சிக்கலான உலகில் அதிக நம்பிக்கையுடன் செல்ல உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்,“ என்று விளக்கினார்.

# கடந்த வருடம் 40.3 பில்லியன் ரூபாய் லாபம்

இலங்கை வங்கி 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபமாக 40.3 பில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது திரவத்தன்மை, மூலதனம், செயற்திறன், இலாபம் மற்றும் சொத்துத் தரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இலங்கை வங்கி வெளிப்படுத்தியுள்ள வலுவானதும் நிலையானதுமான செயற்திறனைக் காட்டி நிற்கிறது.

தொழிற்துறைப் போட்டியும் சவாலும் மிகுந்த சூழலிலும் இலங்கை வங்கியால் இத்தகையவொரு சாதனையை நிகழ்த்த முடிந்ததெனின் அதற்கு அதன் தொழில் நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த ஆளணியே காரணம் எனலாம்.

இந்த ஆளணியே நலிவடைந்து சென்ற வணிகத் துறைகளை வியாபாரப் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு உத்திகள் மூலம் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றியது.

இந்தச் சாதனையானது, வங்கித் துறையில் உள்ள சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி நவீன தொழில்நுட்பங்களைக் கைக்கொள்வதன் மூலம் சிறந்த நிதிசார் அடைவுகளை தொடர்ச்சியாகப் பேணியவாறே சவாலான காலங்களிலும் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் வங்கியின் ஆற்றலையும் போராட்ட குணத்தையும் பறைசாற்றுகிறது.



# ஆண்டின் சிறந்த மக்கள் வர்த்தக முத்திரைக்கான இளைஞர் விருது




Samsung Sri Lanka, SLIM Kantar People's Awards 2024 நிகழ்வில் SLIM Kantar People's Brand of the year இளைஞர் விருதை வென்றது.

மார்ச் 19, 2024 அன்று Monarch Imperial Grand Ballroomஇல் நடைபெற்ற SLIM Kantar People's Brand of the year விருது வழங்கும் நிகழ்வு, தொழில்துறையின் பிரபலங்கள், சந்தைப்படுத்தல் நிபுணர்கள் மற்றும் முன்னணி பிராண்டுகளின் பிரமாண்டமான ஒன்றுகூடலாக இருந்தது.

இந்த சிறப்புமிக்க நிகழ்வானது பிராண்ட் உருவாக்கம் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாடு ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறது, பல்வேறு மக்கள்தொகைகளில் வாடிக்கையாளருடன் வெற்றிகரமாக எதிரொலித்த பிராண்டுகளை முன்னிலைப்படுத்துகிறது.

தனித்துவமான சாதனையாளர்களில் Samsung Sri Lanka சிறந்து விளங்கியது, அதன் சிறந்த மற்றும் புத்தாக்கத்திற்கான உறுதியான அர்ப்பணிப்பு, வாடிக்கையாளர் விருப்பத்தில் முன்னணியில் அதை உயர்த்தியுள்ளது, ஒவ்வொரு வகையிலும் முன்னணி போட்டியாளராக தனது நிலையை தக்க வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# GIPA விருது அறிமுகம்

பொதுக் காப்புறுதித் துறையைச் சேர்ந்த விற்பனை நிபுணர்களின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் உலகின் முதலாவது பிரத்தியேகமான கௌரவிப்புத் திட்டமான General Insurance Pinnacle Achiever (GIPA) விருதை ஸ்ரீ லங்கா இன்ஸ"ரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) அறிமுகம் செய்துள்ளது.

பொதுக் காப்புறுதி விற்பனைத்திறனை கௌரவிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளதுடன், விற்பனைச் சிறப்பில் சர்வதேச நியமங்களை ஏற்படுத்துவதற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது.

60 வருட கால உறுதியான சந்தைப் பிரசன்னத்தைக் கொண்டாடும் ஸ்ரீ லங்கா இன்/ரன்ஸ் ஜெனரல் லிமிடெட், தொழிற்துறையில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவையை இனங்கண்டிருந்தது.

அத்துடன், பொதுக் காப்புறுதி விற்பனை நிபுணர்களின் வெற்றிகரமான செயற்பாடு மற்றும் அர்ப்பணிப்பை கொண்டாடும் சர்வதேச, சுயாதீன கட்டமைப்பு ஒன்று காணப்படாமை, அவர்களின் அபிவிருத்தியை ஊக்குவிக்காமை மற்றும் தொழிற்துறை மட்டத்தில் பொதுக் காப்புறுதி விற்பனை நியமங்களை நிறுவுவதில் காணப்படும் இடைவெளியையும் இனங்கண்டிருந்தது.

ஆயுள் காப்புறுதித் துறை மில்லியன் டொலர் வட்ட மேசை (MDRT) மற்றும் ஆயுள் காப்புறுதி சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வு சம்மேளனத்தினால் (LIMRA) அங்கிகரிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றை கொண்டிருந்த போதிலும், பொதுக் காப்புறுதித் துறையைச் சேர்ந்த நிபுணர்களுக்கு அவற்றுக்கு நிகரான எவ்விதமான திட்டங்களும் இல்லை.

# சர்வதேச மகளிர் தினத்தை கோலாகலமாக கொண்டாடிய People's Leasing & Finance PLC



இலங்கை மக்களின் மனங்கவர்ந்த–நம்பிக்கையை வென்ற இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான People's Leasing & Finance PLC (PLC) நிறுவனம் இந்த வருடத்துக்கான சர்வதேச மகளிர் தினத்தை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடியது.

பாலின சமத்துவத்தை மதித்து எதிலும் பெண்களுக்கு உரிய இடத்தை வழங்கும்–அவர்களின் முன்னேற்றத்துக்குத் துணை நிற்கும் நிதி நிறுவனம் என்ற வகையில் People's Leasing & Finance PLC நிறுவனம் இந்த மகளிர் தினத்தைக் கொண்டாடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

இந்த மகளிர் தினத்தையொட்டி நிறுவனம் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்துள்ளது.அவை அனைத்தும் பெண்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களாகும்.

"பெண்கள் நாட்டின் கண்கள்"" என்ற பொன் மொழிக்கு ஏற்ப பெண்களை மதித்து அவர்களின் நல்வாழ்வுக்கு அடித்தளமிடுவதில் People's Leasing & Finance PLC நிறுவனம் என்றும் முன்னிலையில் நிற்கிறது.

ஒரு நாட்டினதும் வீட்டினதும் முன்னேற்றத்துக்கு பெண்களின் பங்களிப்பு ஒரு நிச்சய தேவை என்பதை ஏற்றுக்கொள்ளும் இந்த நிறுவனம் மகளிருக்கான அதன் மகத்தான சேவைகளை மேலும் அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

# STEM புலமைப்பரிசில்களுக்காக பெண்கள் அறிமுகம்




ருமு இன் கல்வி வாய்ப்புகள் மற்றும் கலாசார உறவுகளுக்கான சர்வதேச அமைப்பான பிரிட்டிஷ் கவுன்சில், ருமு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, ளுவுநுஆ திட்டத்தில் பெண்களுக்கான பிரிட்டிஷ் கவுன்சில் புலமைப்பரிசிலை அறிமுகப் படுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்த மதிப்புமிக்க புலமைப்பரிசில் பெண் ளுவுநுஆ பட்டதாரிகள் இங்கிலாந்தில் தங்கள் முதுநிலைப் படிப்பைத் தொடர வடிவமைக் கப்பட்டுள்ளது.

25 புலமைப்பரிசில்கள் இலங்கை மற்றும் பிற தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பெண் ளுவுநுஆ புலமையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் ஐந்து ருமு உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாவர். – லண்டன் குயின் மேரி பல்கலைக்கழகம், ஆங்கிலியா ரஸ்கின் பல்கலைக்கழகம், கிரீன்விச் பல்கலைக்கழகம், சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகம் மற்றும் கோவென்ட்ரி பல்கலைக்கழகம். இந்த புலமைப்பரிசில்கள் பயனாளிகளுக்கு ளுவுநுஆ கல்வியில் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், இங்கிலாந்தின் மதிப்பிற்குரிய ளுவுநுஆ துறைகளின் நிபுணத்துவத்தில் அவர்களை மேம்படுத்துவதன் மூலம், அவர்களின் சொந்த நாட்டில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை இயக்குவதற்கான அவர்களின் திறனை எளிதாக்குவதற்கும் உதவுகிறது. ருமு தற்போது அனைத்து ருமு வெளியீடுகளில் 55.2மூ சர்வதேச ஆராய்ச்சி ஒத்துழைப்புகளின் படி உலகில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

# பகுப்பாய்வு சேவைகள் அறிமுகம்



இலங்கையின் முன்னணி ஒட்டுமொத்த கழிவு முகாமைத்துவ தீர்வுகள் சேவை வழங்குனரான INSEE Ecocycle, சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் கைத்தொழில்களுக்கான அதிநவீன பகுப்பாய்வு ஆய்வகத்தை அமைப்பதன் மூலம் தனது சேவை வரிசையை விரிவுபடுத்தியுள்ளது.

புதிதாக நிறுவப்பட்ட ஆய்வகம் கழிவு நீர் சோதனை, சேதன உர சோதனை, எரிபொருள் சோதனை, கன உலோக பகுப்பாய்வு மற்றும் கழிவு பகுப்பாய்வு உள்ளிட்ட விரிவான பகுப்பாய்வு சேவைகளை வழங்குகிறது.

இந்த சேவைகள் தொழில்துறைகளுக்கு அவற்றின் பகுப்பாய்வுத் தேவைகளுக்கு துல்லியமான, நம்பகமான மற்றும் அங்கீகாரம் பெற்ற தீர்வுகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

"எமது பகுப்பாய்வு ஆய்வகம் மதிப்புமிக்க ISO 17025 தரச்சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன், இது சர்வதேச தரம் மற்றும் துல்லியமான தரத்தை நாங்கள் கடைப்பிடிப்பதை அங்கீகரித்துள்ளது," என்று INSEE Ecocycle இன் பொது முகாமையாளர் சுஜித் குணவர்தன அவர்கள் குறிப்பிட்டார்.

"நிலைபேண்தகு வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் இணக்கத்திற்கான முயற்சிகளில் தொழில்துறைகளுக்கு உதவுவதற்காக, அதிநவீன சுற்றுச்சூழல் தீர்வுகளை வழங்கும் எமது முயற்சியில் இது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாக அமைந்துள்ளது," என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்புச் சபை ஏற்றுமதி செயலாக்க வலயத்திற்குள் Ecocycle முன் செயலாக்க தொழிற்சாலையில் அமைந்துள்ள இந்த அதிநவீன ஆய்வுகூடமானது தொழில்துறைகளின் பல்வேறு பகுப்பாய்வு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மிகவும் கவனமாக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# UBT பல்கலைக்கழக கொழும்பு தலைமை அலுவலகத்தின் கோலாகல திறப்பு விழா



இலங்கையின் முன்னணி கல்வி நிறுவனமான ருடீவு ஊயஅிரள தனது கொழும்பு தலைமை அலுவலகத்தை பிரமாண்டமாக திறந்து வைத்துள்ளது. கொழும்பு 03, சு யு னுந ஆநட ஆயறயவாய, 320 1ஃ 1 இல் இந்தத் திறப்பு விழா இடம்பெற்றது.

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களுக்கு தரமான–சர்வதேச தரம் வாய்ந்த கல்வியை வழங்கி–மிகச் சிறந்த தொழில் வல்லுநர்களை உருவாக்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதை உண்மையான நோக்கமாகக் கொண்டு செயற்படும் இந்த கல்வி நிறுவனத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே இந்தத் திறப்பு விழா அமைந்துள்ளது.

மாணவ சமூகம் மீதான ருடீவு ஊயஅிரள இன் அர்ப்பணிப்பு,உண்மைத் தன்மை மற்றும் சிறந்த மாணவ சமூகத்தின் ஊடாக இந்த நாட்டை கட்டியெழுப்பும் நோக்கம் இந்த விழா மூலம் நூறு வீதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ,ருடீவு ஊயஅிரள இன் இந்த மேற்படி அம்சங்களை மேலும் பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தத் திறப்பு விழா பலம் சேர்க்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் மலேசியாவின் சைபர்ஜெயா பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் டாக்டர் ஹசன் பஸ்ரி ஜஹ"பர் சாதிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.